**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**C.C. No: 76/2024**
**Dated: 16.06.2026**
**Deposition of Witnesses for PW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.மணிகண்டன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tr.Vinothkumar,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1, 2-வது எதிரிகள் ஆஜர்ப்படுத்தப்பட்டார். 4, 7 எதிரிகள் ஆஜர்.**
**இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**
**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் கீழ 7-ம் வீதியில் வசித்து வந்தேன். தற்போது திருக்கட்டளையில் வசித்து வருகிறேன். நான் பிளம்பர் வேலை செய்து வருகிறேன். கடந்த 2023-ம் ஆண்டு நானும் எனது நண்பர் கோபால் என்பவரும் இருசக்கர வாகனத்தில் நரிமேட்டிலிருந்து வரும்போது சிங்கமுத்து அய்யனார் கோவில் என்ற இடத்தில் மது விலக்கு போலீசார் சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது என்னையும் என் நண்பரையும் நிறுத்தி நாங்கள் வந்த வாகனத்தை சோதனை செய்தார்கள். எங்களது

பின்புறத்திலிருந்து வந்த ஆட்டோவை சோதனை செய்தார்கள். அப்போது அந்த ஆட்டோவை ஓட்டி வந்த சண்முகம் என்பவருடைய ஆட்டோவை சோதனை செய்தபோது அந்த ஆட்டோவில் 3 மூட்டைகள் கஞ்சா இருந்தது தெரிய வந்தது. அந்த இடத்தில் போலீசார் எங்களிடம் இந்த வழக்கிற்கு சாட்சியாக இருக்கிறிர்களா என்று கேட்டார்கள். நாங்களும் அதற்கு சம்மதித்தோம். அதன் பின்பு சண்முகம் என்பவரை கைது செய்து அவரிடம் இருந்து கஞ்சா மூட்டைகள் மற்றும் ஆட்டோவையும் கைப்பற்றினார்கள். அதற்கு எங்களை சாட்சியாக இருக்க சொன்னார்கள். அதன் பின்பு சண்முகம் என்பவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். சண்முகம் கொடுத்த வாக்குமூலத்தில் தன்னுடன் தொடர்புடைய எதிரிகளை பற்றி சொன்னார்கள். போலீசார் சண்முகத்தை ஜீப்பில் ஏற்றி சென்றார்கள். அதன்பின்பு நாங்களும் பின் தொடர்பு போலீசாருடன் சென்றோம். அங்கு பெரியார் நகர் பகுதியிலுள்ள சேவகமூர்த்தி என்பவரின் வீட்டை அடையாளம் காட்டினார். அங்கு போலீசார் சோதனை செய்தார்கள். அங்கு சோதனை செய்தபோது 2 மூட்டைகள் கஞ்சா இருந்தது. போலீசார் அதனை கைப்பற்றினார்கள். அந்த இடத்தில் போலீசார் எங்களிடம் கைப்பற்றிய கஞ்சாவிற்காக கையெழுத்து கேட்டு கொண்டார்கள். நாங்கள் கையொப்பம் செய்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த

விவரம் சொன்னேன். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2-வது கையொப்பம்** என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அதசாஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சேகவமூர்த்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அதசாஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் மேல் எந்தவித வழக்குகளும் கிடையாது. என் பெயர் மணிகண்டன். நான் தான் மணிகண்டன் என்பதை உறுதிப்படுத்துவற்கு இந்நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வயது 32. என்னை போலீசார் சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய அன்று மட்டும் தான் என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலீஸ்சார் பெயர் தெரியுமா என்றால் அது தற்போது ஞாபகம் இல்லை. வழக்கு சம்பவம் ஒன்று நடக்கவில்லை என்றும் அதனால் தான் என்னை விசாரித்த போலீஸ்சார் பெயர் விவரம் எனக்கு ஞாபகம் இல்லை என தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொதுவாக தான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். நான் எழுதிய ஆவணங்களில் தான் கையொப்பம் செய்தேனா என்றால் தட்டச்சு செய்ததில் கையொப்பம் செய்தேன். யாரால் தட்டச்சு செய்யப்பட்ட விரவம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கையொப்பம் போட சொன்ன

இடத்தில் கையொப்பம் செய்தேன். நான் 10-ம் வகுப்பு வரை படித்ததினால் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அசதாஆ.5 ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதசாஆ.3 சோதனை சம்மத கடிதத்தில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எனக்கு 2023-ம் வருடம் 28 வயது ஆகும். ஆனால் இந்நீதிமன்றத்தில் அதசாஆ.5 அத்தாட்சியில் மணிகண்டன் வயது.40 ஆக உள்ளது என்று சொன்னால் சரிதான். அதசாஆ.5-ல் சண்முகம் என்பவரின் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. அதசாஆ.11-ல் மணிகண்டன் வயது.40 என்றும், 2-வது எதிரி சேவகமூர்த்தி என்பவருடைய கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க தான் கையொப்பம் செய்ததாக விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம்

நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சாட்சி அழைப்பாணையில் காண்பிக்கப்படும் கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது தான். அதசாஆ.10, 11-ல் உள்ள கையொப்பத்திற்கும் என்னுடைய அழைப்பாணையிலுள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். எனது விசாரணை வாக்குமூலத்தில் நான் சொன்ன சங்கதிகளை யார்

வாக்குமூலங்களாக பதிவு செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அந்த போலீசார் பெயர் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன தேதி, நேரத்தில் என் முன்னிலையில் யாரையும் கைது செய்யவில்லை என்றும், அவர்களிடமிருந்து எந்தவிதமான கஞ்சாவும் கைப்பற்றப்படவில்லை என்றும் வாகனம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் போலீசாருடன் வேறு எந்த இடத்திற்கும் செல்லவில்லை என்றும் அவ்வாறு கஞ்சா எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கண்ட ஆவணங்களில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும் ஆவணங்களில் கண்ட கையொப்பம் என்னுடையது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் வழக்கில் கண்ட சொத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

**<u>மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் 1-வது எதிரியை பார்த்ததாக சொல்வது பொய் என்றும் 1, 2 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**C.C. No: 76/2024**
**Dated: 16.06.2026**
**Deposition of Witnesses for PW - 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திருமதி.ராணி ரமாதேவி** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tr.Vinothkumar,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1, 2-வது எதிரிகள் ஆஜர்ப்படுத்தப்பட்டார். 4, 7 எதிரிகள் ஆஜர்.**
**இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**
**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அறந்தாங்கி மகளிர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2023-ம் வருடம் புதுக்கோட்டை மது விலக்கு அமுலாக்க பிரிவு குற்ற எண்.1058/2023 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(C), 25 NDPS Act வழக்கின் எதிரியான 1-ம் எதிரி சண்முகம், 2-ம் எதிரி சேவுகமூர்த்தி என்பவர்களை 17.12.2023-ம் தேதி 17.00 மணிக்கு கைது செய்தார்கள். மேற்படி இரண்டு எதிரிகளான சண்முகம், சேவுகமூர்த்தி இருவரும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் வித்யா, க/பெ.சண்முகம், வடக்கு 2-ம் வீதி என்பவர் மேற்படி எதிரிகளுக்கு உதவியாக இருந்ததாக சொன்னதன் பேரில் எதிரி வித்யாவை மேல 2-ம் வீதி, வடக்கு 2-ம் வீதி, நரிமேடு ஆகிய இடங்களில் தேடி டவுன் சங்கர மடம் அருகே வித்யா TN 55 BE 6795 Honda Dio என்ற இருசக்கர வாகனத்தை ஒட்டி கொண்டு வந்தார். அப்போது காலை சுமார் 7.00 மணி இருக்கும். த.கா.சரவணகுமார் மற்றும் ஆய்வாளர் ஜெயராமன் மற்றும் நான் வித்யாவை காரணம் கூறி கைது செய்தோம். அந்த வழியாக இரண்டு நபர்கள் நின்று கொண்டிருந்தவர்களை காவல் ஆய்வாளர் அழைத்து வழக்கு விவரத்தை எடுத்து கூறியும் வித்யா ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதாகவும் அதற்கு சாட்சியாக அவர்களை இருக்குமாறு வேண்டினார். அதற்கு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அவர்கள் பெயர் விவரம் 1) காசிலிங்கம் த/பெ.வீரப்பன், மேட்டுப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம் 2) நாராயணன், த/பெ.கணேசன், புதுவயல், முத்தப்பா பார்க், காரைக்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டம் ஆகும். காலை 7.30 மணிக்கு வித்யா தானாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை த.கா.சரவணகுமார் மடிகணிணியில் டைப் செய்தார். தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்சொன்ன சாட்சிகளும் வித்யாவும் காவல் ஆய்வாளரும் கையொப்பம் செய்தார்கள். காவல் ஆய்வாளர் வித்யா ஒட்டி வந்த இருசக்கர வாகனம் TN 55 BE 6795 பதிவெண் கொண்ட Honda Dio மற்றும் அவர் வைத்திருந்த Oppo A 57, Oppo A 77 ஆகிய செல்போன்களையும் 8.30 மணிக்கு கைப்பற்றினார்கள். அதற்காக வேண்டி மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். பின்னர் வித்யா மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் காவல் ஆய்வாளர் வித்யாவை காவல் அடைப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கவும் நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

## 1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் என் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். நான் எந்தவொரு ஆவணத்திலும் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். நான் காவலர் என்பதால் அன்றாட பணிகள் குறித்து டைரி எழுத வேண்டும் என்ற நடைமுறை உள்ளது என்றால் சரிதான். அந்த டைரியை பார்த்தால் தான் நான் என்ன பணிகள் செய்தேன் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எங்களுடைய காவல் நிலையத்தில் ரோல் கால் நடைமுறை உள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் பணி பதிவேடு, வருகை பதிவேடு உள்ளது என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் எந்த தேதி விசாரித்தார் என்றால் அன்றைய தினமே 18.12.2023ம் தேதி காலை 9 மணிக்கு மேல் விசாரித்தார். ஆய்வாளர் தவிர வேறு யாரும் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் நான் சொன்ன தேதி, நேரத்தில், இடத்தில் வைத்து 3வது எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவரிடமிருந்த எந்தவிதமான வாகனமோ, தொலைபேசியோ கைப்பற்றப்படவில்லை என்றும் உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

3வது எதிரி வித்யாவை சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றும், அவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் எந்த தடய சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால்

கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 76/2024**

**Dated: 16.06.2026**

**Deposition of Witnesses for PW - 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.சரவணக்குமார்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tr.Vinothkumar,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1, 2-வது எதிரிகள் ஆஜர்ப்படுத்தப்பட்டார். 4, 7 எதிரிகள் ஆஜர்.**

**இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மணமேல்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். முன்பு 2023-ம் வருடம் புதுக்கோட்டை மது விலக்கு அமுலாக்க பிரிவு குற்ற எண்.1058/2023 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(C), 25 NDPS Act வழக்கின் எதிரியான 1-ம் எதிரி சண்முகம், 2-ம் எதிரி சேவுகமூர்த்தி என்பவர்களை 17.12.2023-ம் தேதி 17.00 மணிக்கு கைது செய்தார்கள். மேற்படி இரண்டு எதிரிகளான சண்முகம், சேவுகமூர்த்தி இருவரும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வித்யா, க/பெ.சண்முகம், வடக்கு 2-ம் வீதி என்பவர் மேற்படி எதிரிகளுக்கு உதவியாக இருந்ததாக சொன்னதன் பேரில் எதிரி வித்யாவை மேல 2-ம் வீதி, வடக்கு 2-ம் வீதி, நரிமேடு ஆகிய இடங்களில் தேடி டவுன் சங்கர மடம் அருகே 18.12.2023ம் தேதி ஆய்வாளர் தலைமையில் நானும், பெண் காவலர் ராணி ரமாதேவி நரிமேடு, வடக்கு 2ம் வீதிக்கு சென்றோம். அப்போது சுமார் 7 மணிவாக்கில் சங்கரமட ரோட்டில் வித்யா TN 55 BE 6795 Honda Dio என்ற இருசக்கர வாகனத்தை ஒட்டி கொண்டு வந்தார். அப்போது காலை

சுமார் 7.00 மணி இருக்கும். நான், பெண் காவலர் ராணி ரமாதேவி மற்றும் ஆய்வாளர் ஜெயராமன் மற்றும் நான் வித்யாவை காரணம் கூறி கைது செய்தோம். அந்த வழியாக இரண்டு நபர்கள் நின்று கொண்டிருந்தவர்களை காவல் ஆய்வாளர் அழைத்து வழக்கு விவரத்தை எடுத்து கூறியும் வித்யா ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதாகவும் அதற்கு சாட்சியாக அவர்களை இருக்குமாறு வேண்டினார். அதற்கு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அவர்கள் பெயர் விவரம் 1) காசிலிங்கம் த/பெ.வீரப்பன், மேட்டுப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம் 2) நாராயணன், த/பெ.கணேசன், புதுவயல், முத்தப்பா பார்க், காரைக்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டம் ஆகும். காலை 7.30 மணிக்கு வித்யா தானாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை ஆய்வாளர் சொல்ல நான் எனது மடிகணிணியில் டைப் செய்தேன். தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்சொன்ன சாட்சிகளும் வித்யாவும் காவல் ஆய்வாளரும் கையொப்பம் செய்தார்கள். காவல் ஆய்வாளர் வித்யா ஒட்டி வந்த இருசக்கர வாகனம் TN 55 BE 6795 பதிவெண் கொண்ட Honda Dio மற்றும் அவர் வைத்திருந்த Oppo A 57, Oppo A 77 ஆகிய செல்போன்களையும் 8.30 மணிக்கு கைப்பற்றினார்கள். அதற்காக வேண்டி மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். பின்னர் வித்யா மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் காவல் ஆய்வாளர் வித்யாவை காவல் அடைப்பு செய்யவும்

நடவடிக்கை எடுக்கவும் நான் உதவியாக இருந்தேன். 28.03.2024ம் தேதி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சுப்பையா அவர்களின் உத்தரவின்படி காவல் ஆய்வாளர் ஜெயராமன் அவர்கள் தலைமையில் நானும், ஆலங்குடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவை சேர்ந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கவிதா என்பவரும் ஆய்வாளர் கிடைத்த ரகசிய தகவலின் படி புறப்பட்டு கருவேப்பிலை ரெயில்வே கேட் அருகே நின்றுக்கொண்டிருந்த ஜானகி என்பவரை காலை 7 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தும், அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பொது மக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் சிறப்பு உதவி ஆய்வாளர் கவிதா மற்றும் என் முன்னிலையில் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை என் மடிக்கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்து கொடுத்தேன். அதில் நானும், மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் கவிதா என்பவரும் கையெழுத்து செய்தோம். பின்பு எதிரியுடன் நிலையம் வந்து காவல் அடைப்பு செய்ய உதவியாக இருந்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

## <u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் என் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். ஆனால் டைப் அடித்தேன். நான் எந்தவொரு ஆவணத்திலும் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். நான் காவலர் என்பதால் அன்றாட பணிகள் குறித்து டைரி எழுத வேண்டும் என்ற நடைமுறை உள்ளது என்றால் சரிதான். அந்த டைரியை பார்த்தால் தான் நான் என்ன பணிகள் செய்தேன் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எங்களுடைய காவல் நிலையத்தில் ரோல் கால் நடைமுறை உள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் பணி பதிவேடு, வருகை பதிவேடு உள்ளது என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் எந்த தேதி விசாரித்தார் என்றால் அன்றைய தினமே 18.12.2023ம் தேதி காலை 9 மணிக்கு மேல் விசாரித்தார். ஆய்வாளர் தவிர வேறு யாரும் என்னை விசாரிக்கவில்லை.

நான் இந்த வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(பி)ன் படி நான் தட்டச்சு செய்ததற்கான சான்று எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னால் தட்டச்சு செய்த கணினியின் DP அளவு என்ன, அதில் நான் தட்டச்சு செய்ததற்கான MB கொள்ளளவு கொண்டது என்ற விவரம் குறித்து ஆய்வாளரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் தட்டச்சு செய்த ஆவணங்கள் யாரால் எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது என்ற விவரம் குறித்து ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்தான் பிரிண்ட் அவுட் எடுத்தேன். நான் எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுத்தேன் என்ற விவரத்தை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னால் தட்டச்சு செய்யப்படவில்லை என்றும் நான் சொன்ன தேதி, நேரத்தில் வித்யா, ஜானகி இருவரையும் கைது செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் நான் ஆய்வாளரின் உத்தரவின் படி காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் மட்டும் தான் விசாரித்தார் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் வழக்கு சொத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எதிரிகள் வித்யா, ஜானகி சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றும், எதிரிகள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் எந்த தடய சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை விசாரணை செய்தபோது நான் ஆவணங்களில் கையெழுத்து செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை:-** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.